பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 10 2025 SUNDAY 7.15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. இந்தியா - ஆசியான் இடையேயான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. சத்திஷ்கடில் 21 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

4. ஆந்திரா, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

5. ஆசிய Rugby-7 சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், காஸியாபாதில் தனியார் மருத்துவமனை திறப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

நாடுமுழுவதும் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு தனியார் மருத்துவ நிறுவனங்களும் பங்களிக்க வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று செசல்ஸ் சென்றடைந்தார்.

இந்திய வம்சாவளியினர் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இந்தியா – செசல்ஸ் இடையேயான உறவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியா - ஆசியான் இடையேயான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் நடைபெற்று வரும் இந்தியா - ஆசியான் உச்சிமாநாட்டில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

இந்த நல்லுறவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் அவர் கூறினார்.

உலகின் கால் பங்கு மக்கள்தொகையை இந்தியா மற்றும் ஆசியான் கொண்டிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா - ஆசியான் இடையேயான கடல்சார் ஒத்துழைப்புக்கான ஆண்டாக அடுத்த ஆண்டு அறிவிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

21ஆம் நூற்றாண்டு இந்தியா – ஆசியானுக்கானது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் வாக்காளர்களை கவரும் வகையில், புதிய அறிவிப்புகளை ஆளும் மற்றும் எதிர்க்கட்சி கூட்டணிகள் அறிவித்து வருகின்றன.

எதிர்க்கட்சி கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளர் திரு. தேஜஸ்வி யாதவ், இன்று பாட்னாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

தங்கள் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு 50 லட்சம் ரூபாய் காப்பீடு அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான மதிப்பூதியமும் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும் என்று அவர் கூறினார்.

பொதுவிநியோக திட்ட முகவர்களுக்கான மதிப்பூதியமும் அதிகரிக்கப்படும் என்று திரு. தேஜஸ்வி யாதவ் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பீகார் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் முக்கிய முனையமாக பீகாரை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பீகார் மாநில வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டத்தை தேசிய ஜனநாயக கூட்டணி வகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் நிறைவேற்ற முடியாத சில வாக்குறுதிகளை அறிவித்து வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

சத்திஷ்கடில் 21 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

Kanker மாவட்டத்தில் காவல்துறையினர் முன் இவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்தவர்களில் 13 பேர் பெண்கள் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

ஏராளமான ஆயுதங்களையும் அவர்கள் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

>>>>><<<<<

நடப்பாண்டிற்கான தேசிய அறிவியல் விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

*13 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன.*

*இதன்படி, விஞ்ஞான் ரத்னா விருது, இயற்பியலில் சிறப்பாக பணியாற்றிய பேராசிரியர் Jayant Vishnu Narlikar-க்கு மறைவுக்கு பிந்தைய விருதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*விஞ்ஞான் ஸ்ரீ விருது, டாக்டர் தங்கராஜ் உட்பட 8 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*விஞ்ஞான் யுவா விருது, டாக்டர் Jegdeesh Gupta உட்பட 10 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிரப் புயலாக வலுவடைந்து நாளை மறுநாள் ஆந்திர மாநிலம், காக்கிநாடா அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதை அடுத்து, ஆந்திராவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்விடப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

*இன்று Tadepalli-யில் அம்மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி. வங்களப்புடி அனிதா அதிகாரிகளுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.*

*தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதை உறுதி செய்யுமாறு அவர் அறிவுறுத்தினார்.*

*மீனவர்கள் கரைக்கு திரும்ப வேண்டும் என்று அறிவுறுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*இந்த புயல் குறித்த தகவல்களை வழங்குவதற்கு 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறைகளை திறக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*பாதிக்கப்படும் பகுதிகளில் மீட்புப் பணிகள் விரைவாக மேற்கொள்வதற்கு ஏதுவாக, மாவட்ட நிர்வாகங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் திருமதி. வங்களப்புடி அனிதா அறிவுறுத்தினார்.*

*புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிக்கப்படக்கூடும் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு அடுத்த மூன்று தினங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.*

*மாநிலம் முழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.*

*புதுச்சேரியில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை தொடங்கப்பட்டுள்ளது.*

*தேசிய பேரிடர் மீட்புப் படையினர் கொண்ட குழு, ஏனாம் சென்றுள்ளது. அங்கு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அடுத்த மூன்று தினங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அரசு பள்ளிகள் புயல் நிவாரண மையங்களாக செயல்படும் என்றும் புதுச்சேரி அரசு தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*உத்தரபிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர், 5 பேர் காயமடைந்தனர்.*

*Jaunpur-ல் நின்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

>>>>><<<<<

*ரஷ்யாவில், அணுசக்தியில் இயங்கும் Burevestnic ஏவுகணை, வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் அறிவித்துள்ளார்.*

*பாதுகாப்பு படைகளின் தளபதி மற்றும் ராணவ கமாண்டர்களோடு காணொலி வாயிலாக உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.*

*இந்த ஏவுகணை வான்வெளியில் 15 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டது என்றும் அவர் கூறினார்.*

*சோதனையின்போது இது உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*14 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு செல்லும் திறன் கொண்ட இந்த ஏவுகணை, அணுஆயுதங்களையும் ஏற்றிச் செல்லும் வல்லமை படைத்தது என்றும் திரு. விளாடிமிர் புட்டின் கூறினார்.*

>>>>><<<<<

*பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் இடையேயான இரண்டாவது சுற்று பேச்சுக்கள் இஸ்தான்புல்லில் இன்று நடைபெற்றன.*

*எல்லைப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.*

>>>>><<<<<

ஆசிய Rugby-7 சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மஸ்கட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில், இந்தியா, சவுதி அரேபியாவை வென்றது.

>>>>><<<<<

தெற்காசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா 7 தங்கம் உட்பட 18 பதக்கங்களை வென்றது.

ராஞ்சியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் நந்தினி தங்கப்பதக்கத்தையும், Moumita Montal வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 110 மீட்டர் தடை ஓட்டத்தில் Manav தங்கப்பதக்கத்தையும், Krishik வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப்பிரிவில் சஞ்சனா சிங் தங்கப்ப்பதக்கத்தையும், Kajal Kanwade வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப் பிரிவில் Arjun Waskale-ம் மகளிர் 400 மீட்டர் ஓட்டப் பிரிவில் Neeru Pathak-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் வட்டு எறிதல் பிரிவில் Kirbal Singh தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 12 தங்கம், 13 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>><<<<<

*ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*சீனாவின் Chengdu-வில் நடைபெற்ற இப்போட்டியின் 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Diksha Sudhakar தங்கப்பதக்கத்தையும், Lakshya Rajesh வெள்ளி பதக்கத்தையும் வென்றனர்.*

*15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் Shaina Manimuthu தங்கப்பதக்கம் வென்றார்.*

*17 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் Jagsher Singh Kangurra-வும், கலப்பு இரட்டையர் பிரிவில் Jangjeet Singh Kajla – Jananika Ramesh இணையும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

>>>>><<<<<

*ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகளின் பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் Preetismitha Bhoi தங்கப்பதக்கம் வென்றார்.*

*பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 44 கிலோ எடைபிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார.*

*இதன் மற்றொரு பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் அவர் வென்றார்.*

>>>>><<<<<

*உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா - பங்களாதேஷ் இடையேயான ஆட்டம் மழையினால் தடைபட்டுள்ளது.*

*நவிமும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டி, மழை காரணமாக 43 ஓவராக குறைக்கப்பட்டது.*

*இதில் முதலில் பேட் செய்து வரும் பங்களாதேஷ், 12 புள்ளி இரண்டு ஓவரில் இரண்டு விக்கெட் இழப்புக்கு 39 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டது.*

*>>>>>END<<<<<*